பேர் கலவை செய்யும் தொழிலாளர்கள் என்று தோன்றுகிறது. காயமடைந்த 20 பேர் கூக்குரல் கேட்டதும் கலவை செய்யப்படும் அறைக்கு விரைந்தோடித் தீயினால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தோன்றுகிறது.

வெடி மருந்துகள் முதுநிலை ஆய்வாளரும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்த இடத்திற்குச் சென்று புலனாய்வு செய்து விசாரணை நடத்தினர். இவ்விபத்தின் விளைவாக இத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இது இன்னும் மீண்டும் திறக்கப்படவில்லை.

தீ விபத்துக்களையும் பிற விபத்துக்களையும் தடுப்பதற்காக இத்தகைய தொழிற்சாலைகளில் பல்வேறு வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொழிற்சாலை ஆய்வாளரகம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் தீவிபத்து கற்பித்துள்ள படிப்பினையை யொட்டி, தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் உட்பட கூடுதலான விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் விதிக்கப்படும். அவற்றைக் கண்டிப்பாக செயல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து 19 பேர் உயிர் இழந்ததாகத் தெரிகிறது. இதேபோல் சிவகாசியிலும் அடிக்கடி நடக்கிறது. வெடி மருந்துச் சட்டம் சரியாக அமல் படுத்தாததால் இந்தமாதிரியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவைகள் ஏற்படாமல் செய்வதற்காக அரசாங்கம் விசேஷமாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? குறுகிய இடத்தில் மிக அதிகமான பேர்களை வேலை செய்யச் செய்த இந்த நிர்வாகத்தினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? உயிர் இழந்தவர்களுக்கு நஷ்டஈடு தரப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை நடத்தி அறிக்கை அளிப்பதாக இருக்கிறார். அறிக்கை அரசுக்குக் கிடைத்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொதுவிவாதம் நடைபெறும்.

5. நடைமுறைக் கேள்வி

சட்டப்பேரவை முஸ்லிம் லீக் கட்சித்தலைவர் நியமனம்.

திரு. க. ராமமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சட்டமன்ற கட்சித் தலைவராக ஹாஜி ம.மு. பீர்முகம்மது என்பவரை நியமித்திருப்பதாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திரு முகம்மது இஸ்மாயில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழக சட்டசபையில் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற உரிமை, சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பாகும். ஹாஜி முகம்மது பீர்முகம்மது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சட்டமன்றக் கட்சி கூடி முடிவு செய்ததா? இதுபற்றி பேரவைக்கு ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. இதற்குமுன் தலைவராக இருந்த திரு. அபிபுல்லா பேக் என்பவர், "தம்மை தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டது தனக்கே தெரியாது" என்று பத்திரிகையில் அறிக்கைவிட்டிருக்கிறார். தமிழகச் சட்டமன்றத்திற்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் யார் என்று அறிவிக்கப்பட வேண்டிய பொறுப்பு, சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பா? அல்லது இங்கே அங்கம் வகிக்காத, அலுவல்களிலே பங்குபெறாத வெளியிலே உள்ள அரசியல் கட்சித் தலைவரின் பொறுப்பா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே உள்ள இரண்டு உறுப்பினர்களிடையே கருத்துவேறுபாடுகள் இருந்தன. ஆகவே, இவர்களுடைய கட்சித் தலைவர், "இவர்தான் சட்டமன்றக் கட்சித் தலைவர்" என்று தெரிவித்தார். அதன்பிறகுதான் அவருக்கு இடமாற்றம் அளித்திருக்கிறோம்.

1969 மார்ச் 3]

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இதை அந்தக் கட்சியி னுடைய சட்டமன்றக் கிளை முடிவு செய்ததா ? அல்லது வெளியிலே இருப்பவர் நியமித்தாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே முஸ்லீம் லீக் கட்சியின் சட்டசபை உறுப்பினர்கள்கூடி, அவர்கள் ஒருவரைத் தலைவராகத் ராகத் தேர்ந்தெடுத்து பரிவுரை செய்ததன் பேரில்தான் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் அதைச் சட்டப் பேரவைக்குத் தெரிவித் திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைக் கூறினார். யாரைத் தலைவராக ஏற்றுக்கொள்வது அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது என்பதற்கு நமது சட்டப்பேரவை விதிமுறைகள் இருக்கின்றன. உறுப்பினர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்புவது, சட்டமன்ற நிகழ்ச்சி முறையில் ஏதேனும் மாறுதல் இருந்தால்தான் எழுப்ப வேண்டும். இது ஒழுங்குப் பிரச்னை அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர் கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். முஸ்லீம் லீக் கட்சி கூடி ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்று கூறினார். அப்படி இருக்க வேண்டுமென்றால், ஒருவர் ஒருவருடைய பெயரை பிரேரேபிக்க வேண்டும், இன்னொருவர் ஆமோதிக்க வேண்டும். ஒரே கிளாஸில் இரண்டு பேர்கள் இருந்து ஒருவர் "ஃபஸ்ட்" என்றால் இன்னொருவர் இரண்டாவது என்றுதான் அர்த்தம். அப்படி முஸ்லிம் லீக் கட்சியில் எத்தனைபேர் இருக்கிறார்கள் ? இரண்டு பேர்கள்தானே. அதில் தலைவருடைய பெயரை ப்ரபோஸ் செய்தது யார் ? "செகண்ட்" பண்ணியது யார் ? (சிரிப்பு).

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுவதற்கு அதிக நேரம் வேண்டு மென்று எல்லா உறுப்பினர்களும் கேட்கிறார்கள். அப்படிப் பேசுவதற்கு அதிகமான நேரத்தை ஒதுக்க முடியவில்லை. ஆகவே, சட்டமன்றத்தி னுடைய அருமையான நேரத்தை இப்படி தேவையல்லாத—அவ்வளவாக முக்கியத்துவம் தர வேண்டாத—விஷயங்களுக்கு செலவழிக்க வேண்டா மென்று கூறிக்கொண்டு, மீண்டும் இதைப்பற்றிய விவாதத்தைத் தொடர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. நா. காசிராமன் அவர்கள் பேசுவார்கள்.

(6) 1969–70-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் பொது விவாதம்—தொடர்ச்சி.

*__திரு. நா. காசிராமன் :__ பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முன்பாக நிதியமைச்சர் 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதையொட்டி நான் சில கருத்துக் களைச் சொல்ல விரும்பி பேச முற்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது புதிய வரிகள் எதுவும் போடப்படாத நிதிநிலை அறிக்கை போன்ற தோற்றத்தை அளிக்கிறது. ஆனால் பின்னால் வரிகள் போடும்படியான சூழ்நிலை இருக்கிறது என்றே தெரிகிறது. இதே போல்தான் 1967–68, 1968–69-ம் ஆண்டுகளிலும் வரிகள் இல்லையென்று முதலில் சொன்னார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு இனத்தின்மீதும் வரிகளைப் போட்டு வந்தார்கள். ஒருசில நாட்களுக்கு முன்கூட விற்பனை வரியில் ஒருசில மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். முதலில் வரிகள் இல்லையென்று சொல்லிவிட்டு, பிறகு கொஞ்சம் கொஞ்ச மாக அதிகமான வரிகளை மக்களிடமிருந்து வாங்குகிறார்கள். இதனால் 5 கோடி, 6 கோடி ரூபாய்க்கு அதிகப்படியாக கிடைக்கும் வாய்ப்பு ஏற்படு கிறது. "மொபிலைசேஷன் ஆஃப் அடிஷனல் ரிசோர்சஸ்" பிரகாரம் அதிகமான அளவில் நிதி கிடைக்கிறது. 1968–69-ல 13·6 கோடி ரூபாய் கையிருப்புடன் இருந்து, 1969–70-ல் 16·7 கோடி ரூபாய் பற்றுக்குறையாக முடியும் நிலைமையில் இருக்கிறது. என்று சொல்லப்படுகிறது. ஆகவே,